**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7462

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.01.2024

Accepted: 23.03.2024

Published: 01.04.2024

Citation:
Raja, A. (2024). Remains of Megalithic Culture: Based on Tamil University Museum Evidence. *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 65–73.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7462

*Corresponding Author:
rajaarchy@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Remains of Megalithic Culture: Based on Tamil University Museum Evidence

**A. Raja**

*Head, Department of Museum*

*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

*https://orcid.org/0000-0001-8820-2413*

**Abstract**

*Archaeologists have defined this period as the Megalithic Age and as they knew the use of iron as the Iron Age because these people built their tombs using large slabs of stone in the Megalithic culture. Megalithic is derived from the Greek word "Mega" means big and "lithic" means stone. Megalithic symbols found in Tamil Nadu are found in different types according to the nature of geography of the respective region. Such cultural symbols have been found in many parts of Tamil Nadu. This article explains about the artifacts that have been discovered, about the Megalithic cultural remains found in the excavations carried out by the Tamil University at Kodumanal, the Graffiti, writing systems, biographical pottery used by the people of that time, the Megalithic cultural artefacts in the Tamil University Museum and its ancient history and biology.*

***Keywords:*** *Megalithic, Urn, Kodumanal Excavation, Tamil Scripts, Archaeological Objects, History, Ancient Tamils, Tamil Culture*

**References**

1. Gurumoorthi, S., (2003), Tholporulayvum thmizhar panpadum, University of Madras, Chennai.
2. Rajan, K., (1998) Kuruyidukalum Ezhuthukalum, Varalatru kalampagam, Mano pathipakam, Thanjavur.
3. Rajan, K., (2004) Tholliyal Nokkil Sangakaalam, Ulaga Thamizhaaraychi niruvanam, Chennai
4. Rajan, K., (2018) Thamizh Bhiramiyin kaalam Chikkalkalum Theervukalum, Aavam 28, Thamizhaka tholliyalkalagam, Thanjavur.
5. Rajavelu,s., Thirumoorthy,G., (1995) Thamizhnaattu tholliyal Agalayvukal, Panpaattu Veliyittagam, Chennai.
6. Selvaraj, S., (2015) Perunkarpadaikaalam, Thinamani Naalithazh, 13.11.2015.
7. Subbarayalu, Y., (1984) Vallam Excavations, Tamil Civilization.2 (4), Tamil University, Thanjavur.
8. Subbarayalu, Y., (2008) Mankala Thamizh Bhirami Ezhuthu porippukal, Aavam 19, Thamizhaka tholliyalkalagam, Thanjavur.
9. Vazhviyal Kalanjiyam Vol.8, Tamil University, Thanjavur, 1988.

# பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடயங்கள்: (தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகச் சான்றுகளை முன்வைத்து

***முனைவர் ஆ. ராஜா***
தலைவர், அருங்காட்சியகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*பெருங்கற்காலப் பண்பாட்டில் பெரிய பலகைக் கற்களைப் பெருமளவில் பயன்படுத்தி மக்கள் தங்களது சவக்குழியை அமைத்துக்கொண்டதால், இக்காலத்தினைப் பெருங்கற்காலம் என்றும், இரும்பின் பயன்பாட்டை அறிந்தவர்களாக இருந்தமையால் இரும்புக்காலம் என்றும் தொல்லியல் அறிஞர்கள் வரையறை செய்துள்ளனர். பெருங்கற்காலம் என்பது "மெகாலித்திக்" (Megalithic) எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. "மெகா" என்றால் பெரிய என்றும் "லித்திக்" என்றால் கல் என்றும் பொருள் கொள்ளலாம். தமிழகத்தில் காணப்படுகிற பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் அந்தந்தப் பகுதியின் நிலவியல் தன்மைக்கேற்பப் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன. அத்தகைய பண்பாட்டுச் சின்னங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலில் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டறியப்பட்டுள்ள தொல்பொருட்கள் பற்றியும், கொடுமணல் என்ற இடத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடயங்கள் குறித்தும், அக்காலத்திய மக்கள் அறிந்திருந்த குறியீடுகள், எழுத்து முறைகள், வாழ்வியல் மட்பாண்டப் புழங்குப் பொருட்கள் குறித்தும், பல்கலைக்கழக அருங்காட்சியகத்திலுள்ள பெருங்கற்காலப் பண்பாட்டுத் தொல்பொருட்கள் குறித்தும் அதன் தொன்மை வரலாறு மற்றும் வாழ்வியல் குறித்தும் இக்கட்டுரை விளக்குகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *பெருங்கற்காலம், முதுமக்கள் தாழி, கொடுமணல் அகழாய்வுகள், தமிழ் பிராமி, தொல்பொருட்கள், வரலாறு, பண்டைத் தமிழர், தமிழர் பண்பாடு*

## முன்னுரை

பெருங்கற்காலம் என்பது "மெகாலித்திக்" (Megalithic) எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தவையாகும். "மெகா" என்றால் பெரிய என்றும் "லித்திக்" என்றால் கல் என்றும் பொருள் கொள்ளலாம். பெரிய பலகைக் கற்களைப் பெருமளவில் பயன்படுத்தி இம்மக்கள் தங்களது சவக்குழியை அமைத்துக் கொண்டதால், இக்காலத்தினைப் பெருங்கற்காலம் என்றும், இரும்பின் பயன்பாட்டை அறிந்தவர்களாக இருந்தமையால் இரும்புக் காலம் என்றும் தொல்லியல் அறிஞர்கள் வரையறை செய்துள்ளனர். தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் ஒவ்வொரு பகுதியின் நிலவியல் தன்மைக்கேற்ப பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன. அத்தகைய பண்பாட்டுச் சின்னங்கள், தமிழகத்தின் பல பகுதிகளிலில் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம் மற்றும் பிற துறைகள் சார்பாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிலிருந்து கள ஆய்வு மற்றும் அகழாய்வுகள் மூலமாக வெளிக் கொணரப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ள பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடயங்கள் பற்றி ஆராய்ந்து விளக்குகின்றது இக்கட்டுரை.

## பெருங்கற்காலப் பண்பாடு

பழைய கற்காலம், நுண்கற்காலம், புதிய கற்காலம் ஆகியப் பண்பாட்டைத்

தொடர்ந்து வளர்ச்சி பெற்ற பண்பாட்டுக் காலமாக பெருங்கற்காலம் உள்ளது. இப்பண்பாடானது தமிழகத்தின் பெரும்பான்மையானப் பகுதிகளில் காணப்படுகின்றது. இந்தியத் தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களாலும், தொல்லியல் ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் போன்றோர்களாலும் தனித்தனியே மேற்பரப்பாய்வுகள் மற்றும் அகழாய்வுகள் மேற்கொண்டு மிகுதியான தொல்லியல் சான்றுகளைக் கண்டறிந்து உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர். இது வரலாற்றை எழுதுவதற்கும் அவற்றை மீளாய்வு செய்வதற்கும் முதன்மை ஆதாரமாக அமைகின்றது. இத்தகைய பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு அறிஞர்கள் பல்வேறு விதமானக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

மார்டிமர் வீலர் Early India and Pakistan *(1969)* என்ற நூலில் பெருங்கற்காலப் பண்பாட்டின் மையப் பிரச்சினைகளை ஆய்வு செய்துள்ளார். தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் பெருங்கற்காலப் பண்பாடு நெருக்கமான நிலையில் காணப்படுகின்றன என்கிறார் மார்டிமர் வீலர். வி.டி கிருஷ்ணசாமி சரியான முறையில் பெருங்கற்காலச் சின்னங்களின் வகைகளைப் பகுத்துள்ளார்.

பிரம்மகிரி பகுதிகளில் அகழாய்வு மேற்கொண்டு, பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் குறித்த அட்டவணை ஒன்றை நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார் கே.எஸ். இராமசந்திரன். என்.ஆர்.பானர்ஜி அவர்கள் இப்பண்பாட்டின் காலம் குறித்த ஆய்வை மேற்கொண்டு கி.மு.1000 - 800 வரை எனப் பகுத்துள்ளார்.

ஏ.அய்யப்பன் The Megalithic Culture of South India என்ற நூலில் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் முதுமக்கள் தாழி வகைகளும், கிருஷ்ணகிரி, கோதாவரி பள்ளதாக்குப் பகுதிகளில் கற்களால் அமைத்த கல்லறைகளும் காணமுடிகின்றது என்கிறார்.

புதுக்கோட்டை மாவட்டப் பகுதிகளில் கிடைத்துள்ள பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களின் பல்வேறு வகைகளைக் குறிப்பிட்டுள்ளார் கே.ஆர்.வெங்கடராம ஐய்யர். சானூர் என்ற இடத்தில் என்.ஆர்.பானர்ஜி மற்றும் கே.வி.சௌந்தரராஜன் (1950), அமிர்தமங்கலத்தில் என்.ஆர்.பானர்ஜி (1954 - 55) அகழாய்வுகள் மேற்கொண்டு நான்கு கால்களுடன் கூடிய ஈம்மப்பேழை, கருப்பு சிவப்பு பானைகள், இவற்றோடு இரும்பு ஆயுதங்கள், கார்னிலியன் மணிகள், எலும்புகள், மண்டை ஓடுகள் ஆகியவற்றை கண்டறிந்துள்ளனர் (ச.செல்வராஜ், 2015, நவம்பர் 10 தினமணி).

தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் ஒய்.சுப்பராயலு தஞ்சாவூர் மாவட்டம், வல்லத்தில் அகழாய்வினை மேற்கொண்டு கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகள் மற்றும் தமிழ் பிராமி எழுத்துக்களுடன் கூடிய பானை ஓடுகள் பலவற்றைக் கண்டறிந்துள்ளார்.

பேராசிரியர் கா.இராஜன் பெருங்கற்காலப் பண்பாடு கி.மு.1000 முதல் கி.பி.100 வரை நிலவியிருக்கலாம் எனக் கருதுகிறார் (கா.இராஜன், 2004). எனினும் அண்மைக் காலங்களில் கொடுமணல், தாண்டிக்குடி, மயிலாடும்பாறை, பொருந்தல், நாகபட்டினம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் இப்பாண்பாடு தொடர்பான சில முக்கிய பண்பாட்டு எச்சங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைக்கப் பெற்ற தொல்பொருட்கள் வாயிலாகப் பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறையை அறிய முடிகிறது. இப்பண்பாட்டுக் காலத்தில் மக்கள் நீர் பாசனத்திற்காகக் கிணறு, சிறு குளம், நீர்த்தேக்கம் போன்றவைகளைஉருவாக்கினர். இன்றும் விழுப்புரம் மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பண்டையக்

குளங்களும் ஏரிகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவர்கள் மேட்டுப்பகுதியில் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். தண்ணீர் வசதிக்கேற்ப ஆறுகள், குளங்கள் அருகேயும் வாழத் தொடங்கினர். இவ்விடங்களில் முதுமக்கள் தாழிகள், மட்கல ஓடுகள் ஆகியவற்றைத் தற்காலத்திலும் காணமுடிகின்றது. இவர்களுக்கு முன்பு வாழ்ந்த புதியகற்காலத்தைச் சார்ந்த மக்களைக் காட்டிலும் பெருங்கற்கால மக்கள் வளர்ச்சியடைந்துக் காணப்பட்டனர். வேளாண்மை செய்யத் தெரிந்தவர்களாக இருந்துள்ளனர். அதற்குத் தேவையான கால்நடைகளை வளர்த்தனர். வேளாண்மை செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற தானியங்களைச் சமைத்து உண்ணுவதற்குத் தேவையான மட்பாண்டங்களை ஆற்றங்கரை அருகிலும், ஏரிகள் அருகிலும் செய்தனர். மட்கலங்களை அவர்களின் வாழ்வியலில் அன்றாட வாழ்வில் பயன்படுத்தினர். இதன்வாயிலாக இப்பண்பாட்டு மக்களின் வாழ்வியலை அறியமுடிகிறது.

### இலக்கியங்களில் பெருங்கற்காலச் சின்னங்கள்

பெருங்கற்காலத்தின் ஈமச்சின்னங்கள் பற்றியும் அதன் சடங்கு முறைகள் பற்றியும் பல இலக்கியச் சான்றுகள் சான்று பகிர்கின்றன. காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல் எனத் தொல்காப்பியம் புறநூல் ஐந்தில் வரிசைப்படுத்தப்படுகிறது. மேலும், மணிமேகலை கீழ்க்கண்டவாறு பெருங்கற்காலப் பண்பாட்டைக் குறிப்பிடுகின்றது.

**சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர்**
**தாழ்வறையிலடைப்போர் தாழியில் கவிப்போர்**

இவ்வரிகளில் இறந்தவர்களைச் சுடுவதும் திறந்தவெளியில் கிடத்துவதும், குழி தோண்டி இடுவதையும், நிலத்துக்குக் கீழே தாழ்ந்த இடங்களில் அடைத்தலும், தாழியில் வைத்து மூடுவதும் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

எனவே, மேற்சுட்டிய சான்றுகளின் வாயிலாகப் பெருங்கற்காலப் பண்பாட்டின் இறுதிகட்டம் சங்ககாலம் வரை தொடர்ந்து இருந்ததை அறியமுடிகிறது. இறந்தவர்களைத் தாழியிலிட்டு புதைப்பதைப் பற்றி மற்றொரு சங்கப் பாடல் கீழ்க் கண்டவாறு கூறுகின்றது.

**கலம் செய் கோவே கலம் செய் கோவே**
**அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய**
**சிறு வெண் பல்லி போலத் தன்னொடு**
**சுரம் பல வந்த எமக்கு அருளி**
**வியல் மலர் அகன் பொழில் ஈமத் தாழி**
**அகலிதாக வனைமோ**
**நனந் தலை மூதூர்க் கலம் செய் கோவே**
**(புறநானூறு 256)**

கணவனுடன் போருக்குச் சென்ற மனைவி துயருடன் கூறும் இப்பாடல், போரில் கணவன் இறந்துவிடுகிறான். அப்போது குயவனை நோக்கி மனைவி உரைத்தது, மண்பாண்டங்கள் செய்யும் குயவனே! இப்பெரிய நிலத்தில், பெரிய மட்பாண்டங்களை செய்யும் குயவனே! பானை செய்யும் வண்டியின் சக்கரத்தில் பொருந்திய ஆர்க்காலைப் பற்றிக்கொண்டு வந்த பல்லிபோல், என் கணவனுடன் பலவழிகளையும் கடந்து வந்த எனக்கும் சேர்த்து, பெரிய தாழி ஒன்றை அருள் கூர்ந்து செய்வாயோ எனக் கூறியுள்ளார்.

**மன்னர் மறைந்த தாழி**
**வன்னி மன்றத்து விளங்கிய நாடே**
**(பதிற்றுப்பத்து 44:22-23)**

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. இப்பாடல் போரில் இறந்த மன்னனை தாழியில் வைத்து புதைத்ததைக் குறிப்பிடுகிறது. ஆகவே சமூகத்தில் மக்கள் முதல் அரசாலும் மன்னன் வரை ஒரேமுறையிலான சடங்கு முறையினை அதாவது இறந்தபிறகு உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் பழக்கத்தைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

மேற்குறித்தச் சான்றுகளை ஒப்பு நோக்குபோது பெருங்கற்காலப் பண்பாட்டின் மரபும், பழக்கவழக்கமும் சங்க காலம் வரை இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

## கொடுமணல் அகழாய்வுத் தொல்பொருட்கள்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்திலுள்ள கொடுமணல், காவேரியாற்றின் கிளை ஆறான நொய்யல் ஆற்றின் வட கரையில் சென்னிமலைக்கு மேற்கே 15கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து இவ்வூரை 'கொடுமணல்' என்று குறிப்பிடுகிறது. சங்க கால இலக்கியங்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் கொடுமணலில் 1985-1986ஆம் ஆண்டுகளில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினரால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய அகழாய்வில் கண்டறியப்பட்ட பெருங்கற்காலத்தைச் சார்ந்த தடயங்கள் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் காட்சிக்கு உள்ளன.

## தொல்பொருட்கள்

கொடுமணலிலுள்ள வாழ்விடப் பகுதியில் அகழாய்வு மேற்கொண்டபோது, அகழாய்வுக் குழிகளின் பல நிலைகளில் சுவரின் அடிப்பகுதிகள், வீட்டுத்தரை எச்சங்கள், செங்கற்கள், கூரை ஓடுகள், மரத்தூண் ஊன்றப்பட்ட குழிகள், அடுப்புப் பகுதிகள் ஆகியவற்றோடு கொல்லர் உலைகளும் (இரும்பு உருக்கு உலைகள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வகழாய்வில் பல உலைகள் வட்டவடிவில் அமைந்திருந்ததோடு உலைகளின் கழிவு அல்லது கசடு அதிகளவில் காணப்பட்டது. இவ்வுலைகளில் சில செம்பு உருவாக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேலும், கொடுமணல் ரோமானிய நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமைக்கான பல சான்றுகள் இங்குக் கிடைத்துள்ளன. குறிப்பாக மேற்பரப்பில் கிடைத்த ரோமானியக் காசும், அகழாய்வுக்குழிகளில் கிடைத்த ரோமன் வகை ரூலெட்டட்மண்கலச் (Rouletted Pottery) சில்லுகளைக் குறிப்பிடலாம்.

மேலும், இரும்பாலான கூர்முனைகள், 137 செ.மீ நீளமுடைய கத்தி, சிறிய கத்திகள், அரிவாள் (K.Rajan, 1997: P.89), செம்பு பொருட்கள், கார்னீலியன் மணிகள், பச்சைக்கல்(Beryl), நீலம்(sapphire), வைடூரியம், ஜாஸ்பர் (Jasper), அகேட் (agate), கார்னட் (Carnet) ஆகிய அரிய கல்மணிகளும் கிடைத்துள்ளன. சங்கு அறுக்கும் தொழில் நடைபெற்றதற்கான தடயங்களாகச் சங்கு வளையல் துண்டுகளும் கிடைத்துள்ளன. இவ்வகழாய்வில் ஏராளமான சூதுபவள மணிகள் கிடைத்துள்ளன. அம்மணிகளில் சில தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அரிய வகைச் சூதுபவள மணிகளைப் பெருங்கற்கால மக்கள் உருவாக்கியதற்கான தொழிற்கூடம் கொடுமணலில் இருந்துள்ளது என்பதை இங்குக் கிடைக்கக்கூடிய மிகுதியான மணிகளின் வாயிலாக அறியமுடிகிறது. இத்தொழிற்கூடத்தில் உருவாக்கப்பட்ட மணிகள் முசிறி பட்டனத்தின் வழியாக மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பண்டைய மக்கள் கடல்கடந்த வணிகத்தை அறிந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வாயிலாக இங்கு விலையுயர்ந்த கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கல்மணிகள் செய்யும் தொழிற்கூடமும், செம்பு, இரும்பு மற்றும் எஃகு உருவாக்கப்பட்டதற்கான தொழிற்கூடங்களும் இருந்தமைக்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இத்தொழிற்கூடங்கள் சுமார் ஐநூறு ஆண்டுகள் நின்று நிலைத்துள்ளது என கா.ராஜன் கருதுகிறார். கொடுமணலில்

உருவாக்கப்பட்ட அணிகலங்களை வாங்குவதற்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வணிகர்கள் வந்துள்ளனர். குறிப்பாக உத்திரபிரதேச மாநிலத்திலிருந்து வணிகர்களும், கைவினைஞர்களும் இங்கு வந்துள்ளதைத் தமிழ் மயமாக்கப்பட்ட பிராகிருத மொழி கலந்த ஆட்பெயர்களும், வணிகர் பெயர்களும் உறுதிப்படுத்துகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாகக் கங்கைச் சமவெளிப் பகுதி பண்பாட்டிற்கே உரித்தான வடக்கத்தியக் கறுப்பு நிற மட்பாண்டங்கள் இங்கு கிடைத்துள்ளதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இத்தகைய மட்பாண்டங்கள் கங்கைச் சமவெளிப் பகுதியில் கி.மு 6ஆம் நூற்றாண்டிற்கும், கி.மு 2ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் கிடைக்கின்றன. கொடுமணலில் கிடைத்த இம்மட்பாண்டம் கி.மு.3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்ததாகும் (கா.இராஜன், 2018: பக்.255-272). மேலும், புலிப்பொம்மை சிகப்பு, ஊதாக்கல் பதிக்கப்பட்டு அழகாகச் செய்யப்பட்டுள்ளது. சில விலங்குகளின் எலும்புகளும், பறவைகளின் எலும்புகளும் கிடைத்துள்ளமையால் இம்மக்கள் புலால் உணவை அருந்தியமை தெரிகிறது (வாழ்வியற் களஞ்சியம்,1998: பக்.72-74).

ஈமக்காட்டில் உள்ள பெருங்கற்படைச் சின்னங்கள் நீத்தோர் நினைவாக உருவாக்கப்பட்ட கல்லறைகளாகும். இவற்றில் ஒருசிலவே மண்ணால் செய்யப்பட்ட தாழிகளாகும். இப்பெருங்கற்படைச் சின்னங்கள் பெரிய கற்பலகைகளைக் கொண்டு நீள்சதுரம் அல்லது சதுரவடிவில் நிலத்துக்கடியில் அமைக்கப்பட்டன. இக்கற்பலகைகள் ஒரு டன் முதல் ஆறு டன் வரை எடையுள்ளவையாகக் காணப்பட்டது. தென்னிந்தியாவில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் குறிப்பாகக் கல்லறைகளில் மிகப்பெரியவை கொடுமணலில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கல்லறைகளில் இடுதுளைகள் (Porthole) இருந்தன. கல்லறைக்குள்ளும் வெளியிலும் நீத்தோர் நினைவாகப் படைக்கப்பட்ட மட்பாண்டங்கள், இரும்பு, செம்புப் பொருள்கள், மணிகள் (Beads) ஆகியவற்றையும், வெண்மை நிற படிகக் கற்கள் (Quartz pieces) ஆகியவை கொண்டும் நிரப்பப்பட்டன. மேலும், 14செ.மீ உயரம் 17 செ.மீ விட்டத்தைக் கொண்டுள்ள கறுப்புநிறத் தாங்கிகள் (Ring stand), 5செ.மீ உயரம், 6செ.மீ விட்டத்தைக் கொண்டுள்ள சிறிய தாங்கிகள், மூடிகள் (Lids), கறுப்பு சிவப்பு நிறக் கிண்ணங்கள் (Bowls), குறியீடுகள் மற்றும் தமிழ்ப்பிராமி எழுத்துப் பொறிப்புகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், மெருகூட்டப்பட்ட கறுப்புசிவப்பு, சிவப்பு வகை மண்கலங்கள், நான்கு கால்களுடன் கூடிய சிவப்பு நிறச் சாடிகள் (Jars), தட்டுகள், சிறிய பெரிய இரும்பு வாள்கள் (Small and big swards), கத்திகள், அம்புநுனிகள், ஈட்டிநுனிகள், கடப்பாரை, உளி, கம்பி, ஆணி, அரிவாள், புலிப்பொம்மை, வாணலி போன்ற வடிகட்டி, கரண்டி, ஊசி, ஊது குழாய், கம்பி, மோதிரம், ஒலிமணி, செம்பு மற்றும் வெண்கலப்பொருள்கள் ஆகியவை அகழாய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. இங்குக் கண்டறியப்பட்ட பொருட்களில் சில தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பது சிறப்புக்குரியதாகும். இவ்வூரில் மிகப்பரந்த அளவில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்கள் உலக அளவில் பேசப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## குறியீடுகள்

குறியீடுகள் என்பது பானையின் உட்புறத்திலோ அல்லது வெளிப்புறத்திலோ காணப்படுகின்ற ஒன்று. கொடுமணலில் தமிழ்ப் பல்கலைக்கழகம், புதுச்சேரிப் பல்கலைக்கழகம், மத்திய தொல்பொருள் அளவீட்டுத்துறை ஆகிய நிறுவனங்கள்

மேற்கொண்ட அகழாய்வுகளில் கீறல் குறியீடுகளும் எழுத்துப்பொறிப்புகளும் உள்ள மட்பாண்ட ஓடுகள் கண்டறியப்பட்டன. மேலும், கரூர், திருக்காம்புலியூர், உறையூர், அழகன்குளம், வல்லம் போன்ற ஊர்களிலும் குறியீடுகள் கிடைத்துள்ளன. அதேபோன்று தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் அதிகமான குறியீடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் தமிழகத்தில் மட்டும் ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட குறியீடுகள் பொறிப்பு பெற்ற பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் கொடுமணலில் கிடைத்த குறியீடுகள் 1456இல் 58 குறியீடுகள் தனிக்குறியீடுகளாவும், 24 அடிப்படைக் குறியீடுகளாகவும் கண்டறியப்பட்டுள்ளன (கா.இராஜன், 2018: பக்.255-272). இக்குறியீடுகள் ஏதோ ஒருவகையான தகவல்களை வெளிப்படுத்தக் கூடியவையாக இருந்திருக்க வேண்டும். எழுத்துகள் உருவாகுவதற்கு முன் மக்கள் தங்களின் எண்ணங்களையும், செயல்களையும், அவர்களைப் பற்றியப் பதிவுகளையும் குறியீடுகள் வாயிலாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

### தமிழ்ப் பிராமி (தமிழி) எழுத்துக்கள்

காலத்தில் மனிதர்கள் குறியீடுகள் மற்றும் ஓவியங்கள் வாயிலாகத் தங்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும், செயல்பாடுகளையும் வெளிப்படுத்தி வந்தனர். அதன்பின் சிந்திக்கத் தொடங்கிய மனிதர்கள் குறியீடுகளிலிருந்து வளர்ச்சி பெற்று எழுத்துக்களைக் கண்டறிந்து உருவாக்க முற்பட்டனர். பண்டையத் தமிழர்கள் கி.மு.500 வாக்கில் எழுத்துகளின் பயனை அறிந்தவர்களாக இருந்துள்ளனர். பொதுவாக இக்காலக்கட்டத்திலுள்ள எழுத்துக்களை தமிழி அல்லது தமிழ்ப்பிராமி என்பர். இவ்வகையான எழுத்துக்கள் கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் வாயிலாக 500க்கும் மிகுதியாகக் கிடைத்துள்ளன (கா.இராஜன், 2018: பக்.255-272). சங்க இலக்கியங்களில் வருகின்ற பெயர்கள் இங்குக் கிடைத்த பானை ஓடுகளில் காணப்படுகின்றன. குறிப்பாகச் சாம்பன் ஸூமநன், கூல அந்தைய் சாம்பன் அகல், கண்ணன் ஆதன், பண்ணன், குவிரன் அதன், அந்தவன் அதன், விஸாகீ, விஸகன், அதன் (எ.சுப்பராயலு, 2008:பக்.189-221), போன்ற எழுத்துப் பொறிப்பு பெற்ற பானை ஓடுகளைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அணைக்கோட்டை என்ற இடத்தில் பெருங்கற்படைச் சின்னம் அகழ்ந்தபோது கிடைத்த முத்திரை ஒன்றில் “கோவேதா” என்ற பிராமி எழுத்து உள்ளது. ஐராவதம் மகாதேவன் அவர்களால் கேரளாவிலுள்ள எடக்கல் என்ற இடத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டின் இறுதியில் “கடும்மி புத சேர” என்ற சொல் தமிழ்ப்பிராமியில் உள்ளது நோக்கத்தக்கது (கா.இராஜன், 1998: பக்.1-8). இதேபோன்று இலங்கையின் தொன்மை ஊராகக் கருதப்படும் அநுராதபுரம் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் பிராகிருதம் தாங்கிய பிராமி எழுத்து பொறிப்புப் பெற்ற மட்பாண்டங்கள் கிடைத்தன. இந்தப் பொருட்கள் காலக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டதால் அம்மண்ணடுக்கு களில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற மட்பாண்டங்களின் காலமும் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு கொண்டுச் செல்லபட்டன.

இந்நிலையில், பொருந்தல் மற்றும் கொடுமணல் அகழாய்வுகளில் வெளிக் கொணரப்பட்ட தமிழ்ப்பிராமி எழுத்து பொறிப்புப் பெற்ற மட்பாண்டங்களும் தமிழ்ப்பிராமி எழுத்துகளின் காலம் குறித்து முக்கியச் செய்திகளை நமக்கு வழங்கின. அதன் விளைவாக அறிவியல் முறைப்படி

கரிமிலக்காலக் கணிப்பு முறையில் பொருந்தல், கொடுமணல் அகழாய்வில் கிடைத்த பொருட்கள் காலக்கணிப்பு செய்யப்பட்டன. இதன் வாயிலாகத் தமிழ்ப்பிராமியின் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்குப் பின் நோக்கித் தள்ளப்பட்டது என்கிறார் கா.இராசன்(கா.இராஜன், 2018: பக்.255-272).

எனவே, கொடுமணல் பெருங்கற்காலத்தில் பெரும் நகரமாகவும், உள்நாடு மற்றும் மேலைநாடுகளுடன் வணிகத் தொடர்பினைக் கொண்டிருந்த செழித்த ஊராகவும் திகழ்ந்திருக்கிறது என்பதை அகழாய்வுகளில் கிடைத்த பல்வேறு வகையான சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும், கொடுமணலில் கண்டறியப்பட்ட எழுத்துப்பொறிப்பு பெற்ற பானை ஓடுகளை அறிவியல் முறைப்படி காலக்கணிப்பு செய்ததில் இதன் காலம் கி.மு.500க்கு பின்நோக்கி எடுத்துச் சென்றுள்ளது சிறப்புக்குரியது. இதன் வாயிலாகத் தமிழகத்தில் குறிப்பாகக் கொடுமணலில் பெருங்கற்கால மக்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே செழிப்புற்றிருந்தார்கள் என்பதனை அறியமுடிகிறது.

### பிற இடங்களில் கிடைத்த பெருங்கற்காலப் பொருட்கள்

ஈரோடு மாவட்டத்திலுள்ள பழமங்கலம் என்ற ஊரில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழி (Urn) ஒன்று கிடைத்தது. இத்தாழி 85 செ.மீ உயரம், 210 செ.மீ சுற்றளவு, 40 செ.மீ விட்டத்தைக் கொண்டதாகவும் சிவப்பு நிறத்திலும் காணப்படுகிறது. 14செ.மீ உயரம், 17 செ.மீ விட்டத்தைக் கொண்டுள்ள கறுப்புநிற தாங்கி (Ring stand) ஒன்றும் கிடைத்துள்ளது. இதே வட்டாரப் பகுதியில் 30செ.மீ உயரம், 10 செ.மீ விட்டம், 90 செ.மீ சுற்றளவைக் கொண்ட சிவப்புநிறச் செம்பழுப்புப் பூச்சு (Russet & Coasted ware) மட்கலம் கிடைத்துள்ளது. இதன் வெளிப்புறத்தில் அழகான வண்ணப் பூச்சுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை நோக்கும்போது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் ஓவியக்கலை அறிந்தவர்களாகவும் இதில் நன்கு தேர்ந்தவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மேலும், கறுப்பு சிவப்பு நிற குடுவை, கலயங்கள், கறுப்புத் தாங்கி போன்றவையும் கிடைத்துள்ளன. கரூர் மாவட்டம் சின்னதாராபுரம் அருகில் அரங்கம்பாளையம் என்னும் இடத்தில் கறுப்பு-சிவப்பு மூடி, கறுப்பு நிறக்கிண்ணம், தாங்கி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்தவையாகும்.

புதுச்சேரிக்கு அருகே தொல்லியல் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமான அரிக்கமேடு என்னும் ஊரில் சிவப்பு நிற ரோமன் வகை மட்கலம் கிடைத்துள்ளது. இம்மட்கலம் 19செ.மீ உயரம், 10செ.மீ விட்டம், 100செ.மீ சுற்றளவுக் கொண்டதாகக் காணப்படுகிறது. இம்மட்கலம் உயரம் குறைவாகவும் வாய் பகுதி குறுகியதாகவும் சுற்றளவு மிகுதியாகவும் இருப்பதைக் காணமுடிகிறது. மேலும் அரிட்டேடன் வகை பானை ஓடு ஒன்று கிடைத்துள்ளது. இந்த ரோமன் வகை பானைகள் இந்தியாவில் குறிப்பாக வடமாநிலங்களில் இதுபோன்ற பானைகளை உருவாக்கியுள்ளனர் என்று தொல்லியல் அறிஞர்களின் அண்மைக்கால ஆய்வு முடிவுகள் உணர்த்துகின்றன. மேலும், பல நிறங்களுடைய அரிய கற்கள். மணிகள் செய்வதற்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தெரிகிறது. இவ்வகையான கற்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சார்ந்தவையாகவும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டக் கற்களாகவும் இருக்கலாம். குறிப்பாகத் தமிழகத்தில் பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்கக் காலத்தைச் சார்ந்த மக்கள் வெண்படி கற்கள், நீலக்கல், சிவப்புக்கற்கள் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட மணிகளை அணிகலன்கலாக பயன்படுத்தியுள்ளனர்.

இதன் வாயிலாக அரிக்கமேடு பெருங்கற்காலத்தின் கடைசிப் பகுதி வரலாற்றுத் தொடக்கக் காலத்தின் தொடக்கப் பகுதியில் ரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்த ஊராகவும் இந்தியாவின் வட மாநிலங்களோடு உறவு கொண்டிருந்த இடமாகவும் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

### சான்றெண் விளக்கம்

1. இராசன்,கா., (1998), குறியீடுகளும் எழுத்துகளும், வரலாற்றுக் கலம்பகம், மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.
2. இராஜன்., கா. 2004. தொல்லியல் நோக்கில் சங்க காலம், மனோ பதிப்பகம், தஞ்சாவூர்.
3. இராஜன், கா., (2018), தமிழ்- பிராமியின் காலம் சிக்கல்களும் தீர்வுகளும், ஆவணம் இதழ்-28, தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
4. இராஜவேலு,சு., மற்றும் திருமூர்த்தி, கோ.(1995).தமிழ்நாட்டுத்தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை.
5. குருமூர்த்தி, சா., (2003), தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
6. சுப்பராயலு, எ., (2008), மண்கல தமிழ்பிராமி எழுத்துப் பொறிப்புகள், ஆவணம் இதழ்-19, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
7. செல்வராஜ்,ச.,2015.பெருங்கற்படைக் காலம் (இரும்புக் காலம் முதல் சங்க காலம் வரை-1), தினமணி நாளிதழ், 13.11.2015.
8. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி எட்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.
9. Subbarayalu, Y., (1984) Vallam Excavations, Tamil Civilization.2(4), Tamil University, Thanjavur.